PlanetRead
Literacy for a Billion

Movie: Jathi Malli
Year: 1993

Song: Manmadha leelaiyil
Lyricist: Vairamuthu

மன்மத லீலையை
வென்றார் உண்டோ
சொல் சொல் சொல்
மன்மத லீலையை
வென்றார் உண்டோ
சொல்
கண்ணபிரான் காலமுதல்
கம்ப்யூட்டர் காலம் வரை
இது தீராத தாகமோ
சொல் சொல்
மன்மத லீலையை
வென்றார் உண்டோ
சொல்
கண்ணபிரான் காலமுதல்
கம்ப்யூட்டர் காலம் வரை
இது தீராத தாகமோ
சொல் சொல்
மன்மத லீலையை
வென்றார் உண்டோ
சொல்

நாங்கள் பிறந்ததும்
நீங்கள் பிறந்ததும்
காமன் செயலல்லவா
தெரிந்தே தடுப்பதென்ன
ஆசை வருவதும்
மீசை வருவதும்
ஈசன் செயலல்லவா
அறிந்தே எதிர்ப்பதென்ன
ரிஷிகள் பத்தினிகள்
வைத்திருந்த தேசமிது
கலவிக்கும் உறவுக்கும்
பழிகண்ட பூமியிது

வள்ளுவனின் திருக்குறள்
மூன்றாம் பாலை
ஏன் தந்தது
இது வாழ்வோடு வந்தது
சொல் சொல் சொல் சொல்
மன்மத லீலையை
வென்றார் உண்டோ
சொல்

வானம் அறுபடும்
பூமி பொடிபடும்
காதல் கழிவதில்லை
மனமோ பிரிவதில்லை
தேகம் பிரியினும்
தீயில் எரியினும்
காதல் எரிவதில்லை
கவிதை அழிவதில்லை
சிவனுக்கும் ரெண்டு பெண்டு
மதனுக்கும் ரெண்டு பெண்டு
கண்ணனுக்கும் பல பெண்டு
கவிதைகள் சொன்னதுண்டு
எனக்கிந்த ஒரு பெண்டு
நானும் கொண்டேன்
இது பிழையா
நீங்கள் செய்யாத லீலையா
சொல் சொல் சொல் சொல்
மன்மத லீலையை
வென்றார் உண்டோ
சொல் சொல்
மன்மத லீலையை
வென்றார் உண்டோ
சொல்
கண்ணபிரான் காலமுதல்

Literacy for a Billion

கம்ப்யூட்டர் காலம் வரை
இது தீராத தாகமோ
சொல் சொல்

மன்மத லீலையை
வென்றார் உண்டோ

*Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.*